MCOP:88/2023

Date:25.04.2024

பெயர் :சதீஷ் (எ) சதீஷ்குமார்

**மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை:</u>**- 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் நேரான ரோடு வலைவுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் விபத்தில் சம்மந்தப்பட்ட இரு வாகனங்களை தவிர வேறு வாகனங்கள் எதுவும் அந்த இடத்தில் வரவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் 20 அடி அகலமுள்ள ரோடு என்றால் சரிதான். நான் ஓட்டிசென்ற வாகனத்தில் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல, எதிரே வந்த மோட்டார் சைக்கிள்தான் கவனக்குறைவாகவும், அஜாக்கரதையாகவும் வந்து நான் ஓட்டிசென்ற இருசக்கரவாகனத்தில் மோதியது. விபத்திற்கு நானும் ஒரு பொருப்பு என்பதால் நஷ்டீடு தொகை விகிதாசாரத்தில் எனக்கும் பொருப்பு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்துகொண்டேன் என்றால் சரிதான். எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதா என்றால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. எனக்கு காயம் எங்கே ஏற்பட்டது என்றால் முகம் மற்றும் தலை பகுதியில் காயம் ஏற்பட்டது. நான் தலைகவசம் அணிந்திருந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முற்றிலும் குணமாகிவிட்டது என்றும், எனக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ சிகிச்சையின்போது போக்குவரத்து செலவுகள் மற்றும் எனக்கு ஊட்டசத்து செலுவுக்கு ரூ.1,00,000/- ஏற்பட்டதற்கு ஆதரவுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

லாரி ஓட்டுநராக வேலை செய்து மாதம் ரூ.30,000/- சம்பாதிக்கிறேன் என்பதை காட்ட தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்மீது மோதிய இருசக்கரவாகனத்தின் ஒட்டுநருக்கு ஓட்டநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 1 ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2 ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடைமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு தொகை

கொடுக்கவேண்டும் என்றால்  1 ம் எதிர்மனுதாரர் தான் அளிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

2 ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>-**இல்லை.

ஒப்பம்/-PW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.